
# கொத்தவால் சாவடி

# இலக்கியம்

ஒரு பலமான இலக்கிய குஸ்திக்குத் தயாராகி வருகிறார் கவிஞர் இந்திரன். 'கவிதையின் அரசியல்' என்ற தம் புதிய நூலில் சினிமாக் கவிஞர்களை கவிஞர்களாகவே ஒத்துக் கொள்ளாத தூய இலக்கியவாதிகளை ஒரு பிடி பிடித்திருக்கிறாராம்.

"தற்காலத் தமிழ்க் கவிதையுலகில் நிலவி வரும் அரசியலை தோலுரித்துக் காட்டுவதாக என் புத்தகம் இருக்கும்" என்கிறார் இந்திரன். பாரதிராஜாவின் சிஷ்யர் ராஜா சந்திரசேகரின் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் சினிமா கவிஞர்களை 'இலக்கியக் கவிஞர்' மனுஷ்யபுத்திரன் வாங்கு வாங்கென வாங்கியதற்கு இப் புத்தகத்தில் பதில் இருக்கும் என்கிறார்கள்.



இந்திரன்

"இந்தியா நான் வாழ்வதற்கே தகுதியில்லாத நாடு. தவறி இங்கே பிறந்து தொலைத்துவிட்டேன். எனவே ஃபிரான்ஸில் போய் செட்டிலாகப் போகிறேன்" என்று சொல்லி வந்த எழுத்தாளர் சாரு நிவேதிதா, இப்போது தம் முடிவை மாற்றிக் கொண்டு சென்னை சின்மயா நகரில் ஒரு ஃப்ளாட் வாங்கி செட்டிலாகி விட்டார். பாவம், ஃபிரான்ஸ்! கொடுத்து வைக்கவில்லை.

"இலக்கியத்தை,



கண்ணன்

காலச்சுவடு கண்ணன் வியாபாரமாக்கி விட்டார்" என்று மேடை மேடையாகச் சுற்றி வருகிறார்கள் காலச்சுவடு இதழின் எதிர் கோஷ்டியினர். 'கண்ணன் வட்டிக்கடை நடத்துகிறார்', 'அடியாள் வைத்திருக்கிறார்' என்று சரமாரியாகப் புகார்களும் உண்டு.

"சி.சு.செல்லப்பாவே பல வியாபார உத்திகளை உபயோகித்துத்தான் தம் 'எழுத்து' பத்திரிகையை நடத்தினார். ஆனால், எதுவுமே செய்ய முடியாத சில்லறைகளும் சவடால்களும் தான் இதுபோல் குறை கூறிக் கொண்டு திரிகின்றனர்" என்று பதிலடி தருகிறார் கண்ணன். இது என்ன இலக்கியக் களமா? கொத்தவால் சாவடியா? என்று கேட்கிறார்கள், இலக்கிய ரசிகர்கள்.

- ஜோதிகா